# உள்ளாட்சித்துறை அறிவிக்கை

[ந.க. எண் 5647/05 (இ—3), நாள் : 12—02—2009.]

## குன்னூர் நகராட்சி

### குடிநீர் கட்டணம்

[ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 130, 131, 132 மற்றும் 306 இன்படி அறிவிப்பு ]

நகராட்சி நிர்வாக இயக்கநர் சென்னை அவர்களின் உத்திரவு எண் 36990/06/டபள்யு எஸ்—1, நாள் 12—07—2006 இல் குன்னூர் நகராட்சியில் தண்ணீர் கட்டணத்தை நிர்வாக மற்றும் பராமரிப்பு செலவுகளை கணக்கிற்கொண்டு உயர்த்துமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. கீழே குறிப்பிட்டுள்ளபடி தண்ணீர் கட்டணத்தை உயர்த்த குன்னூர் நகரமன்றம் தனது தீர்மானம் எண் 322, நாள் 27—06—07 அனுமதி அளித்துள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண் 36990/06/டபிள்யு.எஸ்—1, நாள் 07—10—2008 இல் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ள தண்ணீர் கட்டண விகிதங்களுக்கு அனுமதி அளித்தும் அதற்கான துணைவிதிகள் திருத்தம் செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

11—11—2008 தேதிய முரசொலி நாளிதழில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 309 இன்படி உத்தேசிக்கப்பட்டுள்ள தண்ணீர் கட்டண உயர்விற்கும் உபவிதிகள் 7, 11, 12 மற்றும் 14 திருத்தத்திற்கும் பொது மக்களிடமிருந்து ஆலோசனைகளோ ஆட்சேபனைகளோ ஏதும் பெறப்படவில்லை. எனவே, குன்னூர் நகரமன்றம் தீர்மானம் எண் 1098 நாள் 31—12—2008 தேதிய தீர்மானத்தில் ஏற்கனவே உத்தேசிக்கப்பட்ட உபவிதிகள் திருத்தம் மற்றும் தண்ணீர் கட்டண உயர்வை உறுதி செய்து தீர்மானிக்கப்பட்டது.

இத்திருத்தப்பட்ட தண்ணீர் கட்டணங்கள் வைப்புத் தொகை மற்றும் உபவிதிகள் திருத்தம் 01—04—2009 முதல் நடைமுறைப்படுத்தப்படும் அதாவது 2009—2010 முதல் காலாண்டிற்காக (மார்ச் 09—மே 09) தண்ணீர் கட்டண கேட்பு திருத்தப்பட்ட தண்ணீர் கட்டண விகிதத்தில் கணக்கிடப்படும். மேலும் 01—04—2009 முதல் வழங்கப்படும் புதிய இணைப்புகளுக்கு திருத்தப்பட்ட வைப்பு தொகை வசூலிக்கப்படும்.

| வரிசை எண் | விபரம் | 01—03—2009 முதல் அமுல் படுத்த உள்ள திருத்திய கட்டணம் | | 01—04—2009 முதல் அமுல்படுத்த உள்ள வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| | | 1,000 லிட்டர் குடிநீருக்கான கட்டணம் கட்டணம் | மாதம் ஒன்றிற்கு குறைந்தபட்ச கட்டணம் | |
| (1) | (2) | (3) (ரூபாய்) | (4) (ரூபாய்) | (5) (ரூபாய்) |
| 1. | வீட்டு உபயோக முறை | 7—00 | 70—00 | 3,000/— |
| 2. | வீட்டு உபயோகமற்ற முறை மற்றும் தொழிற்சாலைகளுக்கு | 20—00 | 200—00 | 10,000/— |
| 3. | வணிக உபயோக முறை | 25—00 | 250—00 | 10,000/— |

குடிநீர் கட்டண உயர்வுகள் மற்றும் வைப்புத் தொகை உயர்வுகளை ஊர்ஜிதப்படுத்தி அதனை 2009 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் முதல் அமுல்படுத்தும் விதமாக நீலகிரி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்படுகிறது.

குன்னூர்,
13—2—2009.

(ஒ-இ) X X X.,
ஆணையர் (பொ),
குன்னூர் நகராட்சி.

